**செய்தி வெளியீடு எண் : 1381** **நாள் : 13.07.2023**

**செய்தி வெளியீடு**

மேற்கண்ட அரசாணையின்படி, அறிவியல் நகரம் 2018–2019 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் "ஊரக கண்டுபிடிப்பாளர் விருது"–னை வழங்கி வருகிறது.

இவ்விருது ஊரக புற மக்களின் அறிவுத் திறனை ஊக்குவித்து பல பயனுள்ள புதிய கண்டுபிடிப்புகளை வெளிக்கொணரும் விதத்தில் இரண்டு சிறந்த ஊரக கண்டுபிடிப்பாளர்களுக்கு தலா ரூ. 1,00,000/–(ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)–க்கான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டிற்கான ஊரக கண்டுபிடிப்பாளர் விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் மற்றும் விதிமுறைகள் அறிவியல் நகர இணையதளம் www.sciencecitychennai.in–லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக அறிவியல் நகரத்திற்கு 30/08/2023 அன்று மாலை 5.30 மணிக்குள் வந்து சேருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**துணைத்தலைவர்,**
**அறிவியல் நகரம்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in